தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண். 68, 69 (ம) 70/பேரூ/2021

நாள் 22.11.2021

1. திரு. J. அந்தோணி ட்ருமன்,
141/4 ஜீவா நகர்,
திருச்செந்தூர் ... முறையீட்டு மனு எண்.68/2021ல்
மனுதாரர்

2. S. பொன்னுத்தாய்,
24A1, பாரதியார் தெரு,
திருச்செந்தூர் ... முறையீட்டு மனு எண்.69/2021ல்
மனுதாரர்

3. திரு. S. மகேந்திரன்,
17, முத்துமாலை அம்மன் கோவில் தெரு,
திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனு ண்.70/2021ல்
மனுதாரர்

1. தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி

2. செயல் அலுவலர்,
திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி,
திருச்செந்தூர் ... எதிர்மனுதாரர்கள்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளில் வசித்துவரும் திரு. J. அந்தோணி ட்ருமன், S. பொன்னுத்தாய் மற்றும் திரு. S. மகேந்திரன் ஆகியோரது 04.08.2021 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 09.8.2021ல் பெறப்பட்டு 68/2021, 69/2021 மற்றும் 70/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுக்களாக பதிவு செய்யப்பட்டன.

மனுதாரர்களது முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் பொது ஆணை (common order) வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளில் வசித்துவரும் திரு. J. அந்தோணி ட்ருமன், S. பொன்னுத்தாய் மற்றும் திரு. S. மகேந்திரன் ஆகியோர் அளித்துள்ள 04.08.2021 நாளிட்ட மனுக்களில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளனர்:-

(1). திரு. J. அந்தோணி ட்ருமன்:

திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியில் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் 2019 கந்தசஷ்டி திருவிழாவிற்கான சிறப்பு சுகாதார பணிக்காக திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியால் வெளியிடப்பட்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி, சிறப்பு சுகாதார ஏற்பாட்டு பணிக்காக 17.10.2019 அன்று நடந்த பொது டெண்டரில் தான் கலந்துகொண்டதாகவும், அதன்படி (1) கந்தசஷ்டி திருவிழா காலங்களில் 28.10.2019 முதல் 03.11.2019 வரை திருவிழாவுக்கான தற்காலிக பேருந்து நிலையங்களில் மின் விளக்குகள், ஒலிபெருக்கி அமைத்தல், மைக்செட் அமைத்தல், ஜெனரேட்டர் மூலம் மின் இணைப்பு வசதி செய்தல் (2) திருவிழா காலங்களில் திருச்செந்தூர் பேரூராட்சியின் உள்பகுதியில் பேரூராட்சி மூலம் அமைக்கப்பட்ட சின்டெக்ஸ் டேங்குகளில் லாரி மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய இரண்டு பணிகள் தமக்கு அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களின் முன் அனுமதி கடிதத்தை வைத்து வேலை உத்தரவு தமக்கு வழங்கப்பட்டதாகவும், பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டு பட்டியல் (Bill) பேரூராட்சியின் சம்மந்தப்பட்ட மேற்பார்வையாளரிடம் அறிக்கை பெறப்பட்டு, திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களிடம் வழங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் இன்று தேதிவரை பணம் தனக்கு வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் கேட்டபொழுது பில் பட்டியல் தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டல நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று கூறி வருகிறார்கள். இது சம்மந்தமாக தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டலம் அவர்களிடம் கேட்டபோது என்னை திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரை போய் பாருங்கள் என்று 1 1/2 ஆண்டு காலமாக மாறி மாறி கூறி வருகிறார். எனவே, தமது புகார் மனு குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரணை நடத்தி பட்டியல் தொகை வழங்கப்படாததற்கான தாமதத்தை அறிந்து தமக்கு பில் தொகை கிடைத்திட உரிய நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

(2). S. பொன்னுத்தாய்:

திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியில் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் 2019 கந்தசஷ்டி திருவிழாவிற்கான சிறப்பு சுகாதார பணிக்காக திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியால் வெளியிடப்பட்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி, சிறப்பு சுகாதார ஏற்பாட்டு பணிக்காக 17.10.2019 அன்று நடந்த பொது டெண்டரில் தான் கலந்துகொண்டதாகவும், அதன்படி தனக்கு கந்த சஷ்டி திருவிழா காலங்களில் திருவிழாவிற்காக அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையங்களில் தடுப்புக்கட்டை வேலி அமைக்கும் பணி வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களின் முன் அனுமதி கடிதத்தை வைத்து வேலை உத்தரவு தமக்கு வழங்கப்பட்டதாகவும், பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டு பட்டியல் (Bill) பேரூராட்சியின் சம்மந்தப்பட்ட மேற்பார்வையாளரிடம் அறிக்கை பெறப்பட்டு, திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களிடம் வழங்கப்பட்டது என்றும் ஆனால் இன்று தேதிவரை பணம் தமக்கு வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் கேட்டபொழுது பில் பட்டியல் தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டல நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று கூறி வருகிறார்கள். இது சம்மந்தமாக தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டலம் அவர்களிடம் கேட்டபோது என்னை திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரை போய் பாருங்கள் என்று 1 1/2 ஆண்டு காலமாக மாறி மாறி கூறி வருகிறார். எனவே, தமது புகார் மனு குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரணை நடத்தி பட்டியல் தொகை வழங்கப்படாததற்கான தாமதத்தை அறிந்து தமக்கு பில் தொகை கிடைத்திட உரிய நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

(3). <u>திரு. S. மகேந்திரன்:</u>

திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியில் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் 2019 கந்தசஷ்டி திருவிழாவிற்கான சிறப்பு சுகாதார பணிக்காக திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியால் வெளியிடப்பட்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி, சிறப்பு சுகாதார ஏற்பாட்டு பணிக்காக 17.10.2019 அன்று நடந்த பொது டெண்டரில் தான் கலந்துகொண்டதாகவும், அதன்படி தனக்கு கந்த சஷ்டி திருவிழா காலங்களில் திருவிழாவிற்காக அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையங்களில் நடமாடும் கழிப்பறை வசதி செய்யும் பணி வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களின் முன் அனுமதி கடிதத்தை வைத்து வேலை உத்தரவு தமக்கு வழங்கப்பட்டதாகவும், பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டு பட்டியல் (Bill) பேரூராட்சியின் சம்மந்தப்பட்ட

மேற்பார்வையாளரிடம் அறிக்கை பெறப்பட்டு, திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களிடம் வழங்கப்பட்டது என்றும் ஆனால் இன்று தேதிவரை பணம் தமக்கு வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் கேட்டபொழுது பில் பட்டியல் தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டல நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று கூறி வருகிறார்கள். இது சம்மந்தமாக தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டலம் அவர்களிடம் கேட்டபோது என்னை திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரை போய் பாருங்கள் என்று 1 1/2 ஆண்டு காலமாக மாறி மாறி கூறி வருகிறார். எனவே, தமது புகார் மனு குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரணை நடத்தி பட்டியல் தொகை வழங்கப்படாததற்கான தாமதத்தை அறிந்து தமக்கு பில் தொகை கிடைத்திட உரிய நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. மனுதாரர்களின் புகார் மனுக்கள் மீது திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 3.9.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி பகுதியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் 2019ஆம் ஆண்டு கந்த சஷ்டி திருவிழாவினை முன்னிட்டு திருச்செந்தூர் பேரூராட்சியில் சிறப்பு சுகாதார பணிகளை மேற்கொள்ள திருச்செந்தூர் பேரூராட்சி மன்றத்தின் தனி அலுவலர்/திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் முன் அனுமதி பெறப்பட்டு, 17.10.2019 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மூவருக்கும் பணி ஆணைகள் திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியில் அப்போது செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. ந. நாகராஜன் என்பவரால் (தற்போது பணி ஓய்வு பெற்றவர்) பணி ஆணைகள் வழங்கப்பட்டன. ஒப்பந்ததாரர்கள் தத்தமக்கு வழங்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளப்பட்டமைக்கு அதற்கான பட்டியல்களை (Bills) பேரூராட்சியிடம் வழங்கினார்கள். பணிகள் நடைபெற்றமைக்கு திருச்செந்தூர் பேரூராட்சியின் துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரால் பணிகள் நடைபெற்றன என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு தொகை வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்ததாருக்கு பணி ஆணை வழங்க மன்ற தீர்மானத்தினையோ அல்லது முன் அனுமதியோ திருச்செந்தூர் பேரூராட்சியின் தனி அலுவலர்/திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடம் அனுமதி பெறாமல் குறைபாடுகளுடன் உள்ளதால், பணிகள் மேற்கொண்டமைக்கான தொகையினை வழங்கினால் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் தணிக்கைத் தடை ஏற்படும் என்பதாலும், மேலும் குறைபாடுகளுக்கு உயர் அலுவலரின் பின்னேற்பு பெறவேண்டும் என்பதாலும் நாளது தேதிவரை தொகை வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளது ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.

மேற்காணும் காலத்தில் பணிபுரிந்த பேரூராட்சியின் செயல் அலுவலர், துப்புரவு மேற்பார்வையாளர், பொறியாளர் ஆகியோரை திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் நேரடியாக விசாரணை மேற்கொண்டு பணிகள் நடைபெற்றதை மீண்டும் உறுதி செய்தும் மற்றும் பேரூராட்சி மன்ற தீர்மானம் பெறப்படாமைக்கு சிறப்பினமாக கருதி உரிய பின்னேற்பு வழங்கியும் பட்டியல்படி செலவுத் தொகையினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் மேலொப்பம் பெற்ற பின்னரே அதற்கான செலவினத் தொகை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மேல்நடவடிக்கை எடுக்க இயலும் என்று தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையுடன் அனுப்பிவைத்துள்ள ஆவணங்களின்படி ஒவ்வொரு ஒப்பந்ததாரராலும் பேரூராட்சியில் வழங்கப்பட்டுள்ள பட்டியல்படி அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை குறித்த விவரங்கள் வருமாறு:-

| வ எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரம் | பட்டியல் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. அந்தோணி ட்ருமன் | (1)சோடியம் விளக்குகள், மைக் செட், ஜெனரேட்டர் வசதி செய்தது | ரூ. 2,30,250/– |
| | | (2)மினரல் வாட்டர் வழங்கியது | ரூ. 4,64,750/– |
| | | வழங்கப்படவேண்டிய தொகை | ரூ. 6,95,000/– |
| | (ரூபாய் ஆறு லட்சத்து தொன்னூற்றைந்து ஆயிரம் மட்டும்) | | |
| 2. | S. பொன்னுதாய் | தற்காலிக பேருந்து நிலையங்களில் மரத்தடுப்புவேலி அமைத்த பணிக்கு | ரூ. 93,000/– |
| | (ரூபாய் தொன்னூற்று மூவாயிரம் மட்டும்) | | |
| 3. | திரு. S. மகேந்திரன் | நடமாடும் கழிப்பறை, செப்டிக் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி செய்தமைக்கு | ரூ. 2,88,000/– |
| | (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) | | |
| | | மூன்று ஒப்பந்ததாரர்களுக்கும் ஒப்பளித்து வழங்கப்படவேண்டிய கூடுதல் தொகை | ரூ.10,76,000/– |
| | (ரூபாய் பத்து லட்சத்து எழுபத்தாறாயிரம் மட்டும்) | | |

3. திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர்கள் ஆகியோர் 21.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 30.9.2021 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனு எண்.69/2021ன் மனுதாரரான S. பொன்னுத்தாய், தான் கொரோனா தொற்றுநோய் காரணமாக 15 நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால், தம்மால்

நேரடி விசாரணையில் கலந்துகொள்ள இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். அவரைத் தவிர இதர இரண்டு மனுதாரர்கள் மற்றும் பேரூராட்சிகள் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் மற்றும் திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

(1). 21.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் மனுதாரர் திரு. J. அந்தோணி ட்ருமன் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கடந்த 1996ஆம் ஆண்டு முதல் ஒப்பந்ததாரராக உள்ள நான் 2019ஆம் ஆண்டு திருச்செந்தூர் கோவிலில் நடைபெற்ற கந்தசஷ்டி திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்காக தற்காலிக பேருந்து நிலையங்களில் மக்களுக்கான குடிநீர் வசதி, மின் விளக்குகள், ஒலிபெருக்கி மற்றும் மைக்செட் அமைத்தல், ஜெனரேட்டர் மூலம் மின் இணைப்பு வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த குறுகியகால ஒப்பந்தம் திருச்செந்தூர் பேரூராட்சியால் எனக்கு வழங்கப்பட்டு, அப்பணிகளை எவ்வித குறைகளுமின்றி முடித்துவிட்டேன். ஆனால், பணிகளை முடித்து அப்பணிகளுக்கான தொகையை பேரூராட்சி அலுவலகத்தில் கேட்கும்போது பல்வேறு காரணங்களை தெரிவித்து என்னை அலைகழித்தனர். எனவே, மேற்கண்ட பணிகளை செய்தமைக்காக திருச்செந்தூர் பேரூராட்சியால் வழங்கப்படவேண்டிய தொகையான ரூ.4,64,750/– (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்தி நான்குஆயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) மற்றும் ரூ.2,30,250/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) ஆக மொத்தம் ரூ.6,95,000/–ஐ (ரூபாய் ஆறு லட்சத்து தொன்னூற்றைந்தாயிரம் மட்டும்) பேரூராட்சியின் மூலம் அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதற்குக் காரணமாக இருந்த அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

(2). 21.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் மனுதாரர் திரு. S. மகேந்திரன் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கடந்த 1996ஆம் ஆண்டு முதல் ஒப்பந்ததாரராக உள்ள நான் 2019ஆம் ஆண்டு திருச்செந்தூர் கோவிலில் நடைபெற்ற கந்தசஷ்டி திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கான நடமாடும் கழிப்பிட வசதி (Mobile Toilet) செய்வதற்கான ஒப்பந்தம் திருச்செந்தூர் பேரூராட்சியால் எனக்கு வழங்கப்பட்டது. எனக்கு அளிக்கப்பட்ட பணிகளை எவ்வித குறைபாடுமின்றி முடித்துவிட்டேன். ஆனால், முடிக்கப்பட்ட மேற்கண்ட பணிகளுக்கான பட்டியல் தொகையை பேரூராட்சி அலுவலகத்தில் கேட்டபோது பட்டியல் தனி அலுவலர்/உதவி இயக்குநர் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்து காலம்தாழ்த்தி வந்தனர். இது தொடர்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை பார்த்து முறையிட எனக்கு அனுமதி அளிக்கவில்லை. பணிகளை முடித்து சுமார் 1 1/2 ஆண்டுகள் முடிந்தும் எனக்கு சேரவேண்டிய தொகையான ரூ.2.88 லட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) இன்றுவரை பேரூராட்சியால் வழங்கப்படவில்லை. எனவே, என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிக்கான தொகையை திருச்செந்தூர் பேரூராட்சி வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரியும் திரு. ப. குற்றாலிங்கம் 21.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியில் 2019ஆம் ஆண்டு கந்தசஷ்டி திருவிழாவிற்கான சிறப்பு சுகாதார ஏற்பாட்டு பணிகளை செய்வதற்காக ஒப்பந்ததாரர்களுக்கு தற்காலிகமாக பணிகள் வழங்கப்பட்டன. அதில் S.V. அந்தோணி ட்ரூமன் என்கின்ற ஒப்பந்ததாரருக்கு தற்காலிக பேருந்து நிலையங்களில் மக்களுக்கான குடிநீர் வசதி, மின் விளக்குகள், ஒலிபெருக்கி மற்றும் மைக்செட் அமைத்தல், ஜெனரேட்டர் மூலம் மின் இணைப்பு வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்தவும், மகேந்திரன் என்பவருக்கு நடமாடும் கழிப்பிடங்களை ஏற்படுத்தவும், திருமதி. பொன்னுதாய் என்கின்ற ஒப்பந்ததாரருக்கு திருவிழாவிற்காக அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையங்களில் தடுப்புக்கட்டை வேலி அமைக்கும் பணிகள் வழங்கப்பட்டன. அப்பணிகள், மேற்கண்ட ஒப்பந்ததாரர்களால் செய்து முடிக்கப்பட்டன. ஆனால் மேற்கண்ட பணிகளை முடித்தது தொடர்பான கருத்துருவை (proposal) திருச்செந்தூர் பேரூராட்சியால் எனக்கு அனுப்பப்படாததால், ஒப்பந்ததாரர்களுக்கு சேரவேண்டிய தொகை பேரூராட்சியால் வழங்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலராகவும் தற்போது திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றும் திரு. பா. பாபு என்பவர் 21.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலராகவும் கடந்த 18.10.2021 அன்று முதல் திருச்செந்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலராகவும் (பொறுப்பு) பணியாற்றும் நான், திருச்செந்தூரைச் சேர்ந்த தற்காலிக ஒப்பந்ததாரர்கள் திருமதி. பொன்னுத்தாய், திரு. மகேந்திரன் மற்றும் திரு. அந்தோணி ட்ரூமன் ஆகியோர் திருச்செந்தூர் பேரூராட்சியில் 2019ஆம் ஆண்டு கந்தசஷ்டி விழாவின்போது திருவிழாவிற்கான தற்காலிக பணிகள் பேரூராட்சியால் வழங்கப்பட்டு, மேற்கண்ட பணிகளுக்கான பில் தொகை தற்காலிக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படாதது குறித்த விவரம் திருச்செந்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக (பொறுப்பு) நான்கு நாட்களுக்கு முன்பு பணியேற்ற எனக்கு சரிவர தெரியவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்செந்தூர் மண்டலம் 21.10.2021 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 20.10.2021 நாளிட்ட தமது அறிக்கையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு தொகை வழங்குவதற்கு முன்னர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க எவ்வித தொழில்நுட்ப ரீதியிலான ஒப்புநோக்கு இல்லாமலும், பொறியாளரின் இசைவு இன்றியும் இறுதி செய்து, மன்றத் தீர்மானத்தினையோ அல்லது முன் அனுமதியோ திருச்செந்தூர் பேரூராட்சியின் தனி அலுவலர்/திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் அனுமதி பெறாமல் குறைபாடுகளுடன் உள்ளதாலும் பணிகள் மேற்கொண்டமைக்கான தொகையினை வழங்கினால் உள்ளாட்சி நிதித் தணிக்கை

துறையில் தணிக்கைத் தடை ஏற்படும் என்பதாலும் மேலும் இந்த குறைபாடுகளுக்கு உயர் அலுவலரின் பின்னேற்பு பெறவேண்டும் என்பதாலும் நாளது தேதிவரை தொகை வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளதாக செயல் அலுவலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி பணிகள் மேற்கொண்டமைக்கு மாதம்தோறும் நடத்தப்படும் மன்றக் கூட்டங்களில் பொருட்குறிப்பு சேர்த்து தீர்மானமோ அல்லது முன் அனுமதியோ வழங்கிடக் கேட்டு நாளது தேதி வரை எவ்வித அறிக்கையோ அல்லது பட்டியல் அனுமதி வழங்கிட கேட்டோ எவ்வித அறிக்கையும் வரப்பெறவில்லை. எனவே, திருச்செந்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலரால் பணிகள் நடைபெற்றதை மீண்டும் உறுதிசெய்து பேரூராட்சி மன்ற தீர்மானம் பெறப்படாமைக்கு சிறப்பினமாக கருதி உரிய பின்னேற்பு மற்றும் பட்டியலின்படி செலவு தொகையினை வழங்கிட முழு வடிவில் கருத்துரு சமர்ப்பிக்கும்பட்சத்தில் ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரர்களது மனுக்கள், மனுக்களுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், திருமதி. பொன்னுத்தாய் தவிர இதர இரண்டு மனுதாரர்களது வாக்குமூலங்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி மற்றும் திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) ஆகியோரது வாக்குமூலங்கள், அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதன்படி இம்முறைமன்ற நடுவத்தினால் கண்டறியப்பட்டவை வருமாறு:-

- மனுதாரர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி பகுதியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் நடைபெற்ற 2019ஆம் ஆண்டு கந்தசஷ்டி திருவிழாவினை முன்னிட்டு சிறப்புப் பணிகளை மேற்கொள்ள அப்பேரூராட்சியால் கோரப்பட்ட குறுகியகால ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில், பணியின் அவசர அவசியத்தைக் கருத்திற்கொண்டு திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் பணி ஆணைகள் 18.10.2019ல் வழங்கப்பட்டுள்ளன.

- ஒப்பந்ததாரர்கள் பணிகளை குறித்த காலத்திற்குள் மேற்கொண்டு முடித்ததற்குப் பின்னர் ஒவ்வொருவருவராலும் தனித்தனியே பட்டியல் (Bill) திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளது. திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள ஆவணங்களின்படி மனுதாரர்களது பட்டியல் 7.11.2019 அன்று பேரூராட்சியால் பெறப்பட்டுள்ளது ஊர்ஜிதமாகிறது. அதன்படி மனுதாரர் திரு. அந்தோணி ட்ரூமன் என்பவருக்கு வழங்கப்பட்ட இரண்டு பணிகளுக்கான பட்டியல் தொகை ரூ.6,95,000/—ம் (ரூபாய் ஆறு லட்சத்து தொன்னூற்றி ஐந்தாயிரம் மட்டும்), திருமதி. S. பொன்னுதாய் என்பவருக்கு ரூ.93,000/—ம் (ரூபாய் தொன்னூற்று மூன்றாயிரம் மட்டும்) மற்றும் திரு. S. மகேந்திரன் என்பவருக்கு ரூ.2,88,000/—மும் (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்), ஆக மூன்று ஒப்பந்ததாரர்களுக்கும் மொத்தம்

ரூ.10,76,000/– (ரூபாய் பத்து லட்சத்து எழுபத்தாராயிரம் மட்டும்) திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி நிர்வாகத்தினால் ஒப்பளிக்கப்பட்டு வழங்கப்படவேண்டியுள்ளது.

❖ குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், அவசர அவசியத்தின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட மேற்கண்ட பணிகள் நடைபெற்றமைக்கு திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியின் துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர்களால் 7.11.2019 அன்றே சான்றளிக்கப்பட்டுள்ளது.

❖ பட்டியல்கள் வழங்கப்பட்டதற்கு பிறகு இரண்டு வருட காலம் கடந்துவிட்ட பின்னரும், இதுவரை மூன்று ஒப்பந்ததாரர்களுக்கும் அவர்கள் செய்த வேலைக்கான பட்டியல் தொகை வழங்கப்படாமல் பேரூராட்சி நிர்வாகம் காலதாமதம் செய்து வந்துள்ளதும் அதற்கு பேரூராட்சி உதவி இயக்குநர் (மற்றும்) செயல் அலுவலர்கள் தெரிவித்துள்ள காரணங்களும் ஏற்கத்தக்கதல்ல. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

❖ உண்மையாகவே குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்றாலும், ஒப்பந்ததாரர்களால் 7.11.2019ல் பட்டியல்கள் வழங்கப்பட்டு, சம்மந்தப்பட்டவர்களால் சான்றும் அன்றே அளிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர் நடவடிக்கைகளை பேரூராட்சி நிர்வாகம் துரிதமாக மேற்கொண்டிருந்தால் குறைகளை நிவர்த்தி செய்து, ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை அவர்கள் வழங்கிய தேதியிலிருந்து இரண்டுமாத காலங்களுக்குள் வழங்கப்பட்டிருக்கலாம். அவ்வாறு எந்தவித நடவடிக்கைகளும் திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது.

❖ மேற்படி செயல் பேரூராட்சி அலுவலர்களின் பொறுப்பற்ற மற்றும் கடமை தவறிய செயலாகும்.

❖ மனுதாரர்கள் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்ததற்கு பின்னரும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் பணிகள் முடித்தது தொடர்பான கருத்துருவை (proposal) திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியால் தமக்கு அனுப்பப்படாததால், ஒப்பந்ததாரர்களுக்கு சேரவேண்டிய தொகை பேரூராட்சியால் வழங்கப்படவில்லை என்று தெரிவித்திருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பாகும்.

❖ பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் தனது கண்காணிப்பின்கீழ் இயங்கும் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், பணிகள், வருவாய் மற்றும் செலவின விவரங்கள், நிலுவையில் உள்ள இனங்கள் ஆகியவை குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடத்தி உரிய நடவடிக்கைகளை

மேற்கொண்டிருந்தால் இதுபோன்ற காலதாமதங்கள் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் இருந்திருக்க வாய்ப்பு இல்லை. எனவே, திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தமது கடமையை பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளாமல் மிகவும் அலட்சியமாக இருந்துள்ளது வெட்டவெளிச்சமாகிறது.

8. இந்நேர்வில் 2019 கந்தசஷ்டி திருவிழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட அவசர அவசிய பணிகளுக்கு சிறிய அளவிலான ஒப்பந்தங்களை பெற்று, பணிகளை முடித்து அதற்கான பட்டியல் தொகையை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பளித்து வழங்கத்தவறிய செயல் மன்னிக்க முடியாத குற்றமாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேற்படி காலதாமதத்திற்கு காரணமான சம்மந்தப்பட்ட காலத்தில் பணியாற்றிய திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் முன்னாள் உதவி இயக்குநர்கள் மற்றும் அம்மண்டலத்தின் தற்போதைய உதவி இயக்குநர், திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியின் முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்கள் மற்றும் இதில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஆகியோர் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், ஒழுங்கு நடவடிக்கை குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

9. மேலும், 2019ஆம் ஆண்டு கந்த சஷ்டி திருவிழாவிற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை செவ்வனே செய்து முடித்துள்ள மூன்று ஒப்பந்ததாரர்களுக்கும் அவரவருக்கு வழங்கப்படவேண்டிய பட்டியல் தொகையை நடப்பில் கணக்கிடப்படும் அபராத வட்டியையும் கணக்கிட்டு அவரவர்களுக்குச் சேரவேண்டிய மொத்தத் தொகையை இரண்டுமாத காலத்திற்கு வழங்கவும், வழக்கமாக அரசு நிர்ணயிக்கும் அபராத வட்டித் தொகையை சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஊதியத்தில் பிடித்தம் செய்துகொள்ளுமாறும் பேரூராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

10. இந்த விசாரணையில் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள், குறிப்பாக தற்போது விசாரணையில் கலந்துகொண்ட உதவி இயக்குநர், அதற்கு முன்பு இருந்த உதவி இயக்குநர்கள் சம்மந்தப்பட்ட காலத்தில் இறுமாப்புடனும், ஆணவப்போக்கிலும் இந்தக் கோப்பில் செயல்பட்டது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணப்படுகிறது. This betrays a sad lack of devotion to duty, integrity and conscientious approach to the office they are holding on the part of the Assistant Directors and Executive Officers who have wantonly and wilfully failed to redress the legitimate grievances of the petitioners. The Executive Officers and Assistant Directors responsible should be dealt with deterrently by launching severe disciplinary action against them by the Commissioner of Town Panchayats, at the earliest.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. J.அந்தோணி ட்ரூமன்,
141/4, ஜீவா நகர், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்–628 215

திருமதி S. பொன்னுத்தாய்,
24A1, பாரதியார் தெரு, திருச்செந்தூர்,தூத்துக்குடி மாவட்டம்–628 215

திரு. S. மகேந்திரன்,
17, முத்துமாலை அம்மன்கோவில் தெரு, திருச்செந்தூர்,தூத்துக்குடி மாவட்டம்–628 215

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி.

செயல் அலுவலர்,
திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம–628 215.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032

செயலாளர்